**விவசாய தொழிலாளர் சங்க மாவட்டக் குழுக் கூட்டம்**

First Published : 31 Mar 2010 08:17:04 AM IST

கரூர், மார்ச் 30: தமிழ் மாநில விவசாய தொழிலாளர் சங்கத்தின் கரூர் மாவட்டக் குழுக் கூட்டம் இந்திய கம்யூனிஸ்டு கட்சி அலுவலகத்தில் அண்மையில் நடைபெற்றது.

சங்கத்தின் மாவட்டத் தலைவர் கே. குப்புசாமி தலைமை வகித்தார். மாநிலச் செயலர் நா. பெரியசாமி மாநிலக் குழு முடிவுகளை விளக்கிப் பேசினார். மாவட்டச் செயலர் ஆர். தங்கவேல் அறிக்கை வாசித்தார்.

கூட்டத்தில், ஏப்ரல் 24-ல் சிதம்பரத்தில் நடைபெறும் ஜாதி மறுப்பு, தீண்டாமை ஒழிப்பு மாநில சிறப்பு மாநாட்டில் கரூர் மாவட்டத்திலிருந்து 10 வாகனங்களில் சென்று பங்கேற்பது.

அமைப்பு சாரா தொழிலாளர் நல வாரியத்தில் பதிவு செய்பவர்களுக்கு 20 நாள்களுக்குள் அடையாள அட்டை வழங்க வேண்டும். தேசிய நெடுஞ்சாலைகளில் நடைபெற்று வரும் மேம்பாலப் பணிகளை விரைவுபடுத்த வேண்டும்.

அரவக்குறிச்சி அருகேயுள்ள ஆறு ரோட்டில் நின்று செல்லும் அனைத்து பேருந்துகளும் பாலத்தின் கீழ் நின்று செல்ல வேண்டும். தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தில் மண்ணின் தன்மைக்கேற்ப அளவுகளை மாற்றுவதோடு ஒரு நாளுக்கு ரூ. 100 கூலியாக வழங்க வேண்டும்.

கரூர் பேருந்து நிலையத்தில் பயணிகள் நிற்கும் இடங்களில் கடைகள் செயல்படுவதால் பயணிகள் மிகுந்த சிரமத்திற்குள்ளாகி வருகின்றனர். இதன்மீது உரிய நடவடிக்கை எடுக்க நகராட்சி நிர்வாகத்தை வலியுறுத்துவது என்பன உள்ளிட்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

இந்திய கம்யூனிஸ்ட் மாவட்ட துணைச் செயலர் எம். சேஷன், மாவட்டக் குழு உறுப்பினர்கள் எம். மணி, எம். ஆண்டியப்பன், பி. செல்வம், கே. ராஜலிங்கம், சி. கந்தசாமி உள்ளிட்டோர் கூட்டத்தில் பங்கேற்றனர்.

**உழவர் மன்றங்களில் இளம் விவசாயிகள் உறுப்பினராக வேண்டும்: ஆட்சியர்**

First Published : 31 Mar 2010 03:23:43 AM IST

கிருஷ்ணகிரி, மார்ச் 30: உழவர் மன்றங்களில் இளம் விவசாயிகள் உறுப்பினராகச் சேர்ந்து கிராம வளர்ச்சிக்குப் பாடுபட வேண்டும் என கிருஷ்ணகிரி மாவட்ட ஆட்சியர் வே.க.சண்முகம் கூறினார்.

கிருஷ்ணகிரி மாவட்டம் நல்லூர் கிராமத்தில் பல்லவன் கிராம வங்கி சார்பில் உழவர் மன்றத் தொடக்க விழா செவ்வாய்க்கிழமை நடைபெற்றது. உழவர் மன்றத்தைத் தொடங்கி வைத்து ஆட்சியர் பேசியது:

உழவர்கள் மேம்பாட்டுக்காக இதுபோன்ற மன்றங்கள் தொடங்கப்பட்டுள்ளன. இந்த மன்றங்களில் இளம் விவசாயிகள் உறுப்பினராகச் சேர்ந்து அரசின் நலத்திட்ட உதவிகளை பெறலாம்.

ஒரு ஏக்கரில் பயிர் செய்து கிடைக்கும் விளைபொருட்களை 10 செண்ட் நிலத்தில் சாகுபடி செய்யும் அளவுக்கு நவீன தொழில் நுட்பங்கள் உள்ளன. இந்த நவீன தொழில் நுட்பங்களை உழவர் மன்றங்கள் மூலம் இளம் விவசாயிகள் தெரிந்து கொண்டு கிராமங்களின் வளர்ச்சிக்குப் பாடுபடவேண்டும்.

நபார்டு வங்கியின் மூலம் 2005-ம் ஆண்டில் 5 உழவர் மன்றங்கள் மட்டுமே இருந்ததன. தற்போது 105 உழவர் மன்றங்கள் உள்ளன.

நபார்டு வங்கியின் மூலம் 5 கிராமங்கள் தேர்வு செய்யப்பட்டு, அந்த கிராமங்களில் உழவர் மன்றங்கள் ஆரம்பிக்கப்படும். அதன் கூட்டமைப்பின் மூலம் விவசாயிகள் தேர்வு செய்யப்பட உள்ளனர். தேர்வு செய்யப்பட்ட விவசாயிகளுக்கு பையூர் வேளாண் ஆராய்ச்சி மையத்தில் பயிற்சி வழங்கப்பட உள்ளது என்றார் அவர்.

நபார்டு வங்கி உதவிப் பொது மேலாளர் திருமலை, பல்லவன் கிராம வங்கித் தலைவர் கே.ஜெயபால் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

**கடலூர் மாவட்டத்தில் வேளாண் சேவை மையங்கள்**

First Published : 31 Mar 2010 12:00:00 AM IST

கடலூர், மார்ச் 30: கடலூர் மாவட்டத்தில் 5 வேளாண் சேவை மையங்களை, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் செவ்வாய்க்கிழமை தொடங்கி வைத்தார்.

÷தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு சங்கங்கள் மூலம் தமிழகத்தில் 100 வேளாண் சேவை மையங்களை ஏற்படுத்த, தமிழக அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது.

கடலூர் மாவட்டத்தில் குறிஞ்சிப்பாடி, ஆயிக்குப்பம், பி.முட்லூர், தொழுதூர், பெண்ணாடம் ஆகிய இடங்களில் வேளாண் சேவை மையங்கள் தொடங்கப்பட்டு உள்ளன.

குறிஞ்சிப்பாடி ஆயிக்குப்பத்தில் நடந்த விழாவில், வேளாண் சேவை மையங்களை அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் தொடங்கி வைத்தார்.

÷ரூ.25 லட்சம் மதிப்பிலான வேளாண் உபகரணங்களை (5 மினி டிராக்டர், 5 பவர் டில்லர்கள், 2 நாற்று நடும் கருவிகள், 14 களை எடுக்கும் கருவிகள், 8 பவர் ஸ்பிரேயர்கள், 7 கைத் தெளிப்பான்கள், 11 தார்ப் பாய்கள்) அமைச்சர் வழங்கினார்.

÷நிகழ்ச்சியில் அமைச்சர் பேசியது: கடலூர் மாவட்டத்தில் 106 தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு சங்கங்கள் மூலம் விவசாயிகளுக்கு பயிர்க்கடன், நகைக்கடன், பயிர் காப்பீடு உள்ளிட்ட சேவைகள் அளிக்கப்பட்டு வருகின்றன. 2006-ம் ஆண்டு கடலூர் மாவட்ட விவசாயிகள் 1,00,908 பேருக்கு ரூ.246.11 கோடி வேளாண் கடன்கள் தள்ளுபடி செய்யப்பட்டன. 2009-10-ம் ஆண்டுக்கு 87,889 விவசாயிகளுக்கு பயிர்க்கடன் ரூ.160.1 கோடியும், விவசாயக் கூட்டுப் பொறுப்புக்குழு கடனாக 500 குழுக்களுக்கு ரூ.5.81 கோடியும் மத்திய காலக் கடனாக 764 பேருக்கு ரூ.3.16 கோடியும், மகளிர் சுயஉதவிக்குழு கடனாக 2,468 குழுக்களுக்கு ரூ.15.69 கோடியும் பிற்பட்டோருக்கான கடன் 352 பேருக்கு ரூ.40.91 லட்சமும், சிறுபான்மையினருக்கான கடன் 650 பேருக்கு ரூ.162.5 லட்சமும் மாற்றுத் திறனாளிகள் 311 பேருக்கு ரூ.54.91 லட்சமும் கடன் வழங்கப்பட்டு இருக்கிறது என்றார் அமைச்சர்.

÷நிகழ்ச்சிக்கு மாவட்ட ஆட்சியர் பெ.சீதாராமன் தலைமை வகித்தார்.

கூட்டுறவு சங்கங்களின் இணைப் பதிவாளர் எஸ்.ஆர்.வெங்கடேசன் வரவேற்றார்.

மாவட்ட வருவாய் அலுவலர் எஸ்.நடராஜன், மத்தியக் கூட்டுறவு வங்கியின் தனி அலுவலர் ந.மிருணாளினி உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

**கடலூர் மாவட்டத்தில் வேளாண் சேவை மையங்கள்**

First Published : 31 Mar 2010 12:00:00 AM IST

கடலூர், மார்ச் 30: கடலூர் மாவட்டத்தில் 5 வேளாண் சேவை மையங்களை, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் செவ்வாய்க்கிழமை தொடங்கி வைத்தார்.

÷தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு சங்கங்கள் மூலம் தமிழகத்தில் 100 வேளாண் சேவை மையங்களை ஏற்படுத்த, தமிழக அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது.

கடலூர் மாவட்டத்தில் குறிஞ்சிப்பாடி, ஆயிக்குப்பம், பி.முட்லூர், தொழுதூர், பெண்ணாடம் ஆகிய இடங்களில் வேளாண் சேவை மையங்கள் தொடங்கப்பட்டு உள்ளன.

குறிஞ்சிப்பாடி ஆயிக்குப்பத்தில் நடந்த விழாவில், வேளாண் சேவை மையங்களை அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் தொடங்கி வைத்தார்.

÷ரூ.25 லட்சம் மதிப்பிலான வேளாண் உபகரணங்களை (5 மினி டிராக்டர், 5 பவர் டில்லர்கள், 2 நாற்று நடும் கருவிகள், 14 களை எடுக்கும் கருவிகள், 8 பவர் ஸ்பிரேயர்கள், 7 கைத் தெளிப்பான்கள், 11 தார்ப் பாய்கள்) அமைச்சர் வழங்கினார்.

÷நிகழ்ச்சியில் அமைச்சர் பேசியது: கடலூர் மாவட்டத்தில் 106 தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு சங்கங்கள் மூலம் விவசாயிகளுக்கு பயிர்க்கடன், நகைக்கடன், பயிர் காப்பீடு உள்ளிட்ட சேவைகள் அளிக்கப்பட்டு வருகின்றன. 2006-ம் ஆண்டு கடலூர் மாவட்ட விவசாயிகள் 1,00,908 பேருக்கு ரூ.246.11 கோடி வேளாண் கடன்கள் தள்ளுபடி செய்யப்பட்டன. 2009-10-ம் ஆண்டுக்கு 87,889 விவசாயிகளுக்கு பயிர்க்கடன் ரூ.160.1 கோடியும், விவசாயக் கூட்டுப் பொறுப்புக்குழு கடனாக 500 குழுக்களுக்கு ரூ.5.81 கோடியும் மத்திய காலக் கடனாக 764 பேருக்கு ரூ.3.16 கோடியும், மகளிர் சுயஉதவிக்குழு கடனாக 2,468 குழுக்களுக்கு ரூ.15.69 கோடியும் பிற்பட்டோருக்கான கடன் 352 பேருக்கு ரூ.40.91 லட்சமும், சிறுபான்மையினருக்கான கடன் 650 பேருக்கு ரூ.162.5 லட்சமும் மாற்றுத் திறனாளிகள் 311 பேருக்கு ரூ.54.91 லட்சமும் கடன் வழங்கப்பட்டு இருக்கிறது என்றார் அமைச்சர்.

÷நிகழ்ச்சிக்கு மாவட்ட ஆட்சியர் பெ.சீதாராமன் தலைமை வகித்தார்.

கூட்டுறவு சங்கங்களின் இணைப் பதிவாளர் எஸ்.ஆர்.வெங்கடேசன் வரவேற்றார்.

மாவட்ட வருவாய் அலுவலர் எஸ்.நடராஜன், மத்தியக் கூட்டுறவு வங்கியின் தனி அலுவலர் ந.மிருணாளினி உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

**பச்சைக் கம்பளம் போல காட்சி தரும் ராமநதி அணை**

First Published : 31 Mar 2010 01:49:27 AM IST

பாவூர்சத்திரம், மார்ச் 30: ராமநதி அணையின் உள்பகுதியில் தண்ணீர் இல்லாததால், புற்கள் வளர்ந்து, பச்சைக் கம்பளம் போர்த்தியது போல காட்சியளிக்கிறது.

திருநெல்வேலி மாவட்டம், கடையத்திற்கு மேற்கே 4 கி.மீ. தொலைவில் மேற்குத் தொடர்ச்சி மலையின் அடிவாரப் பகுதியில் ராமநதி அணை அமைந்துள்ளது. இதில், கடந்த பருவமழை காலத்தில் 84 அடி கொள்ளளவில், 82 அடி வரை தண்ணீர் நிரம்பியிருந்தது. இதனால், ஆயிரக்கணக்கான ஏக்கர் பரப்பளவில் நெற்பயிர்கள் பயிரிடப்பட்டு தற்போது அறுவடையும் முடிந்துவிட்டது.

கடந்த 2 மாதங்களாக வெயில் அடித்து வருவதால், தண்ணீர் முழுவதும் வற்றி வறண்ட பாலைவனம் போல காட்சியளித்தது. இந் நிலையில், அணையின் உள்பகுதியில் புற்கள் முளைத்து, பச்சைக் கம்பளத்தைப் போர்த்தியது போல காட்சியளிக்கிறது.

கடந்த ஒரு மாதத்திற்கு முன்னர், மணல் குவியலால் வெள்ளை நிறமாகக் காட்சியளித்த அணையின் உள்பகுதி, தற்போது புற்கள் முளைத்து கிரிக்கெட் மைதானம் போல காட்சி தருகிறது.

அணையின் ஊற்றுப்பகுதியில் தண்ணீர் கசிந்து புற்களின் உள்பகுதி வழியாக வாய்க்கால் போன்று வந்து கொண்டிருப்பதும் கண்களுக்கு விருந்தளிக்கிறது.

**பச்சைக் கம்பளம் போல காட்சி தரும் ராமநதி அணை**

First Published : 31 Mar 2010 01:49:27 AM IST

பாவூர்சத்திரம், மார்ச் 30: ராமநதி அணையின் உள்பகுதியில் தண்ணீர் இல்லாததால், புற்கள் வளர்ந்து, பச்சைக் கம்பளம் போர்த்தியது போல காட்சியளிக்கிறது.

திருநெல்வேலி மாவட்டம், கடையத்திற்கு மேற்கே 4 கி.மீ. தொலைவில் மேற்குத் தொடர்ச்சி மலையின் அடிவாரப் பகுதியில் ராமநதி அணை அமைந்துள்ளது. இதில், கடந்த பருவமழை காலத்தில் 84 அடி கொள்ளளவில், 82 அடி வரை தண்ணீர் நிரம்பியிருந்தது. இதனால், ஆயிரக்கணக்கான ஏக்கர் பரப்பளவில் நெற்பயிர்கள் பயிரிடப்பட்டு தற்போது அறுவடையும் முடிந்துவிட்டது.

கடந்த 2 மாதங்களாக வெயில் அடித்து வருவதால், தண்ணீர் முழுவதும் வற்றி வறண்ட பாலைவனம் போல காட்சியளித்தது. இந் நிலையில், அணையின் உள்பகுதியில் புற்கள் முளைத்து, பச்சைக் கம்பளத்தைப் போர்த்தியது போல காட்சியளிக்கிறது.

கடந்த ஒரு மாதத்திற்கு முன்னர், மணல் குவியலால் வெள்ளை நிறமாகக் காட்சியளித்த அணையின் உள்பகுதி, தற்போது புற்கள் முளைத்து கிரிக்கெட் மைதானம் போல காட்சி தருகிறது.

அணையின் ஊற்றுப்பகுதியில் தண்ணீர் கசிந்து புற்களின் உள்பகுதி வழியாக வாய்க்கால் போன்று வந்து கொண்டிருப்பதும் கண்களுக்கு விருந்தளிக்கிறது.

தினமலர்

**வேளாண் அபிவிருத்தி திட்டத்தில் 25 லட்சம் செலவில் பண்ணை கருவி**

பொள்ளாச்சி : பொள்ளாச்சி தாலுகாவிலுள்ள விவசாயிகளுக்கு தேசிய வேளாண் அபிவிருத்தி திட்டத்தில் 25 லட்சம் ரூபாய் மானியத்தில் பண்ணைக்கருவிகள் வழங்கப்பட்டது.வேளாண் பொறியியல் துறை சார்பில் விவசாயிகளுக்கு பல்வேறு மானிய திட்டங்கள் வழங்கப்படுகிறது. அதில், தேசிய வேளாண் அபிவிருத்தி திட்டத்தில் 50 சதவீத மானியத்தில் பண்ணைக்கருவிகள் வழங்கப்படுகிறது.

பயனாளிகளுக்கு பண்ணைக்கருவிகள் வழங்கும் நிகழ்ச்சிக்கு உதவி செயற்பொறியாளர் ஸ்ரீதரன் தலைமை வகித்தார். பி.ஏ.பி., திட்ட பாலாறு படுகை திட்டக்குழு தலைவர் பரமசிவம் முன்னிலை வகித்து பண்ணை கருவிகளை வழங்கினார். உதவி பொறியாளர் சக்திவேல் நன்றி கூறினார்.அதிகாரிகள் கூறியதாவது:நடப்பு ஆண்டுக்கு 85 பயனாளிகளுக்கு 25 லட்சம் ரூபாய் மானியத்தில் பண்ணைக்கருவிகள் வழங்கப்படுகிறது. நடந்து சென்று களையெடுக்கும் கருவிகள் 48 பேருக்கும், மரம் அறுக்கும் கருவி ஒருவருக்கும், அமர்ந்து கொண்டு களை எடுக்கும் கருவிகள் ஆறு பேருக்கும், தட்டு வெட்டும் கருவிகள் 30 பேருக்கும் வழங்கப்படுகிறது.வரும் நிதியாண்டுக்கு நிதி ஒதுக்கப்பட்டதும் பண்ணை கருவிகள் மானிய விலையில் வழங்குவது பற்றி அறவிப்பு வெளியிடப்படும். அப்போது விவசாயிகள் உரிய ஆவணங்களுடன் விண்ணப்பித்து பயனடையலாம் என்றனர்.

**மின்வெட்டால் வாடும் பயிரால் மேட்டுப்பாளையத்தில் விவசாயிகள் கண்ணீர் கண்ணீர்!**

மேட்டுப்பாளையம் : அடிக்கடி ஏற்படும் மின் வெட்டால், தண்ணீர் இல்லாமல் விவசாய பயிர்கள் வாடுகின்றன. மின்வெட்டை கண்டித்து, தமிழக விவசாயிகள் சங்கம் சார்பில் மேட்டுப்பாளையத்தில் நேற்று கண்டன ஆர்ப்பாட்டம் நடந்தது.

மேட்டுப்பாளையம் தாலுகாவில், குறிப்பாக சிறுமுகை, இரும்பறை, பெத்திக்குட்டை பகுதிகளில் அடிக்கடி மின்தடை ஏற்படுகிறது. வாழை உள்பட பல பயிர்களுக்கு சீரான முறையில் தண்ணீர் பாய்ச்ச முடியாமல் விவசாயிகள் அவதிப்படுகின்றனர். நடைமுறையில் உள்ள அறிவிக்கப்படாத மின் வெட்டை கண்டித்து, மேட்டுப்பாளையம் பஸ் ஸ்டாண்டில் தமிழக விவசாயிகள் சங்கம் சார்பில் கண்டன ஆர்ப்பாட்டம் நடந்தது.

நிகழ்ச்சிக்கு தலைமை வகித்த விவசாய சங்கத் தலைவர் டாக்டர் சிவசாமி பேசியதாவது: தமிழகத்தில், வீட்டு உபயோக இருமுனைக்கு மூன்று மணி நேரம் மின்சாரம் தடை செய்யப்படும், கிராமப்பகுதிகளுக்கு பகலில் ஆறு மணி நேரமும், இரவில் மூன்று மணி நேரமும் மும்முனை மின்சாரம் வழங்கப்படும், என்று தமிழக அரசு அறிவித்துள்ளது. இந்த அறிவிப்பில் உள்ளபடி மின்சாரம் சீராக வழங்கினால், விவசாய பயிர்களுக்கு சிரமம் இல் லாமல் தண்ணீர் பாய்ச்ச முடியும். ஆனால், மும்முனை மின்சாரம் எப்போது வருகிறது என்று தெரிவதில்லை. அப்படியே வந்தாலும், ஒரு மணி நேரம் மட்டுமே இருக்கும். சீரான மின்சார சப்ளை இல்லாததால், பயிர்களுக்கு தண்ணீர் பாய்ச்ச முடியவில்லை. இதுவரை 50 சதவீத பயிர்கள் தண்ணீர் இல்லாமல் கருகிவிட்டன. மீதமுள்ள 50 சதவீத பயிர்களை பாதுகாக்க பகலில் ஆறு மணி நேரமும், இரவில் எட்டு மணி நேரமும் சீரான மின்சாரம் வழங்க வேண்டும்.

கடந்தாண்டு மின்தடை ஏற்பட்ட போது தமிழக அரசு, அடுத்தாண்டுக்கு இதுமாதிரி மின்வெட்டு இருக்காது. மின்உற்பத்தியை அதிகரிக்க புதிய திட்டங்கள் கொண்டு வரப்படும் என்றது. ஆனால், இந்தாண்டு கடந்தாண்டை விட கடும் மின்வெட்டு தொடர்கிறது. மே மாதம் இதைவிட மோசமாக மின்தடை இருக்க வாய்ப்பு உள்ளதால், விவசாயத்துக்கு மும்முனை மின்சாரம் வழங்கப்படுமா என்பது கேள்விக்குறியாக உள்ளது. பன்னாட்டு தொழிற்சாலைகளுக்கு கொடுக்கும் முக்கியத்துவம், நாட்டின் உயிர் நாடியான விவசாயத்துக்கு கொடுப்பதில்லை, என்பது தான் வருத்தமாக உள்ளது.  எனவே தமிழக அரசு, சீரான முறையில் மின்சாரம் வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும். இவ்வாறு, சிவசாமி பேசினார். ஆர்ப்பாட்டத்தில் நிர்வாகிகள் கந்தசாமி, வேலுசாமி, ஈஸ்வரன், ஆசிரியர் முருகையன் உட்பட மேட்டுப்பாளையம், சிறுமுகை பகுதிகளை சேர்ந்த ஏராளமான விவசாயிகள் பங்கேற்றனர்.

**'போராட்டம் தொடரும்'** தமிழக விவசாயிகள் சங்க தலைவர் டாக்டர் சிவசாமி கூறுகையில்," விவசாயத்திற்கு, அறிவிக்கப்பட்ட நேரத்திற்கும் குறைவாகவே மின்சாரம் வழங்கப்படுகிறது. பகலில் எட்டு மணி நேரமும், இரவில் ஆறு

மணி நேரமும் மின் சப்ளை வழங்க தமிழக அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும். இல்லாவிட்டால், கோவை, ஈரோடு மாவட்ட விவசாயிகளை ஒன்றிணைத்து தொடர்ந்து போராட்டம் நடத்துவோம்," என் றார்.

**மஞ்சள் விலை இனி ஏறுமுகம் தான்!**

ஈரோடு: ஈரோடு மஞ்சள் மார்க்கெட்டில் இனி மஞ்சள் விலை ஏறுமுகமாக இருக்க வாய்ப்புள்ளதாக வியாபாரிகள் தெரிவித்தனர். ஈரோட்டில் ஒழுங்கு முறை விற்பனை மையம் கண்காணிப்பில், ஈரோடு சொசைட்டி, கோபி சொசைட்டி மற்றும் தனியார் கமிஷன் மண்டிகள் செயல்பட்டு வருகின்றன. இது தவிர, நூற்றுக்கணக்கான தனியார் ஏற்றுமதி, இறக்குமதி நிறுவனங்கள் செயல்படுகிறது. மஞ்சள் மார்க்கெட்டுக்கு ஈரோடு மாவட்டத்தில் இருந்து 60 சதவீத மஞ்சளும், கர்நாடகா, திருவண்ணாமலை, சேலம், தர்மபுரி, வேலூர் போன்ற பகுதியில் இருந்து 40 சதவீத மஞ்சளும் வரத்தாகிறது.
ஈரோடு மாவட்டத்தில் மைசூர் சம்பா, எட்டாம் நம்பர், பத்தாம் நம்பர் உள்ளிட்ட ரகங்கள் அதிகளவில் பயிரிடப்படுகிறது. எட்டாம் நம்பர் மஞ்சள் டிசம்பர் மாதத்தில் அறுவடை பணி துவங்கி ஜனவரி மாதத்தில் மார்க்கெட்டுக்கு வரத்தானது. கர்நாடகா, சேலம், ஆத்தூர், தர்மபுரி, கிருஷ்ணகிரி, ஓசூர், திருவண்ணாமலை, வேலூர் பகுதியில் இருந்து ஃபிப்ரவரி 15ம் தேதிக்கு மேல் புதிய மஞ்சள் வரத்தானது. மைசூரு சம்பா, பத்தாம் நம்பர் ரகங்கள் ஃபிப்ரவரி, மார்ச் மாதத்தில் அறுவடையாகி தற்போது மார்க்கெட்டுக்க வரத்தாகிறது. சென்ற இரண்டு ஆண்டுக்கு முன் மஞ்சள் விலை அதிகபட்சமாக குவிண்டாலுக்கு ரூ. 2 ஆயிரத்து 500 வரை விலைபோனது. மஞ்சள் வியாபாரிகள் முதல் விவசாயிகள் வரை மஞ்சள் மூட்டைகளை தேக்கி வைத்தனர். ஆனால் 2009-10ல் மஞ்சள் எதிர்பாராத விலையாக குவிண்டாலுக்கு 13 ஆயிரம் ரூபாய் வரை விலைபோனது.இந்த விலையேற்றம் தமிழகம் முழுவதும் உள்ள விவசாயிகளை புருவம்தூக்கச் செய்தது. மஞ்சள் விலையேற்றத்துக்கு முக்கியக்காரணம் ஆன்-லைன் வர்த்தமே என வியாபாரிகள் தெரிவித்தனர். 2010 புத்தாண்டு துவங்கிய முதல் வாரத்தில் குவிண்டால் ஒன்று 11 ஆயிரத்து 500 ரூபாய் வரை விலைபோனது. ஃபிப்ரவரியில் சராசரியாக 11 ஆயிரம் ரூபாய் வரை விலை போனது. மார்ச் 18ல் கோபி கூட்டுறவு விற்பனைக் கூடத்தில் 13 ஆயிரத்து 819 ரூபாய்க்கு விற்பனையாகி வரலாற்று சாதனை படைத்தது. மார்ச் நான்காவது வாரத்தில் மஞ்சள் குவிண்டாலுக்கு 12 ஆயிரத்து 850 ரூபாயாக சரிந்தது. ஈரோடு பெரிய மாரியம்மன் கோவில் பண்டிகையை முன்னிட்டு மார்ச் 29 முதல் ஏப்ரல் 2 முடிய மஞ்சள் மார்க்கெட்டு விடுமுறை அளிக்கப்பட்டுள்ளது. மாரியம்மன் கோவில் பண்டிகைக்கு பிறகு ஆண்டுதோறும் மார்க்கெட் சூடுபிடிக்கும். நடப்பாண்டில் மாரியம்மன் பண்டிகைக்கு பின் மார்க்கெட் நிலவரம் எவ்வாறு இருக்கும் என்பது அனைவரின் எதிர்பார்ப்பாக உள்ளது.
ஈரோடு மஞ்சள் வியாபாரி ஒருவர் கூறியதாவது: நடப்பாண்டில் கோடைகாலம் முன்கூட்டியே துவங்கியுள்ளது. மாவட்டத்தில் அனைத்து பகுதியில் இருந்தும் ஈரோடு மார்க்கெட்டுக்கு புதிய மஞ்சள் வரத்தாகி கொண்டுள்ளது. பெரிய மாரியம்மன் பண்டிகைக்கு பின் வரத்தை பொருத்தே மஞ்சள் விலை ஏற்ற இறக்கத்தை கணிக்க முடியும். எப்படியிருந்தாலும் எதிர்காலம் ஏறுமுகமாகத்தான் இருக்க வாய்ப்புள்ளது.
இவ்வாறு அவர் கூறினார்.

**அந்தியூர் பகுதியில் வெள்ளை எள் சாகுபடி அதிகரிப்பு: கருப்பு எள்ளின் மீது மோகம் குறைவு**

அந்தியூர்: அந்தியூர் பகுதியில் வெள்ளை எள் சாகுபடி நடப்பாண்டு அதிகரித்துள்ளது. கருப்பு எள் அறுவடையில் உள்ள நடைமுறைச் சிக்கல், விலை குறைவு உள்ளிட்ட பிரச்னைகளால் விவசாயிகளுக்கு அதன் மீது மோகம் குறைந்துள்ளது. அந்தியூர் சுற்று வட்டாரப் பகுதிகளான மைக்கேல்பாளையம், மலைகருப்புசாமி கோவில், கோவிலூர், வெள்ளித்திருப்பூர், பூனாச்சி உள்ளிட்ட கிராமங்களில் வெள்ளை எள் அதிகளவில் சாகுபடி செய்யப்படுவது வழக்கம். எள் ஏலத்துக்கு பெயர் போன மைலம்பாடி விற்பனைக் கூடத்தில், சீஸன் சமயத்தில் ஆயிரக்கணக்கான மூட்டைகளை

விவசாயிகள் குவிப்பர். பல கோடி ரூபாய் மதிப்பிலான வெள்ளை எள் வந்து குவிவதால், அதிகாரிகள் திண்டாடும் நிலை ஏற்படும். வாரந்தோறும் சனிக்கிழமைகளில் நடக்கும் ஏலத்தில் பல்வேறு ஊர்களிலிருந்து வியாபாரிகளும் குவிந்து விடுவர். சென்றாண்டு சீஸனின் போது, வெள்ளை எள் கிலோ ஒன்றுக்கு அதிகப்படியாக 75 ரூபாய் வரை ஏலம் போனது.

நடப்பாண்டும் மைலம்பாடி விற்பனைக் கூடத்தை ஒட்டிய ஊர்களில் மானாவாரி, கிணற்றுப்பாசனம் மற்றும் ஆழ்குழாய் பாசனம் மூலம் விவசாயிகள் அதிகளவில் வெள்ளை எள் சாகுபடி செய்யப்பட்டுள்ளது. எள் பயிரில் வெள்ளை, கருப்பு என்ற இரு ரகங்கள் இருந்தாலும், தற்போது கருப்பு எள் சாகுபடி முற்றிலும் தவிர்க்கப்படுகிறது. வெள்ளை எள் தரமாகவும், சுவையாகவும் இருப்பதும் இதற்கு காரணம். மேலும், வெள்ளை எள்ளுக்கு மார்க்கெட்டில் நல்ல மவுசு உண்டு. கருப்பு எள்ளுக்கு அந்தளவுக்கு விலை கிடைக்காது.

இதனால், 120 நாட்களில் அறுவடைக்கு தயாராகும் வெள்ளை எள் சாகுபடியில் விவசாயிகள் அதிக ஆர்வம் காட்டுகின்றனர். மேலும், வெள்ளை எள் எந்த மாதத்தில் வேண்டுமானாலும் பயிரிட்டு கொள்ளலாம். குறிப்பாக, ஆற்றுப் பாசனம், கிணற்றுப் பாசனம், ஆழ்குழாய் பாசனத்தை பயன்படுத்தும் விவசாயிகள் உடனுக்குடன் பயிரிடுகின்றனர். மானாவாரி விவசாயிகளும் மழை சீஸனில் பயிரிட்டு பயன்பெறுகின்றனர். மாறாக, கருப்பு எள்ளை ஆடி, பங்குனி மாதத்தில் மட்டுமே பயிரிட முடியும். கருப்பு எள் அறுவடையின் போது, அம்பாரத்தில் ஏற்றி ஒரு வாரம் வைத்திருக்க வேண்டும். வெள்ளை எள் அறுவடையில் அந்த சிக்கல் இல்லை. வேலை அதிகம் செய்தாலும், கருப்பு எள் குறைந்த விலைக்கே ஏலம் கோரப்படுகிறது. வெள்ளை எள்ளுக்கு நல்ல விலை கிடைக்கிறது. இதனால், கருப்பு எள் மீது மோகம் குறைந்து, அதை சாகுபடி செய்ய விவசாயிகள் ஆர்வம் காட்டுவதில்லை. விவசாயி ஒருவர் கூறியதாவது: அந்தியூர் சுற்று வட்டாரப் பகுதியில் ஓரளவுக்கு நிலத்தடி நீர்மட்டம் இருந்தாலும், முந்தைய காலங்களைப் போல எள் பயிரிடுவதை அதிகம் விரும்புவதில்லை. காரணம், வாழை, கரும்பு, மஞ்சள் பயிருக்கு விவசாயிகள் மாறிவிட்டனர். ஆனாலும், ஒரு சில பெரு விவசாயிகள் கருப்பு எள்ளை தவிர்த்து வெள்ளை எள் ரகத்தை பயிரிடுகின்றனர். கருப்பு எள்ளை அறுவடை செய்ததும் விற்க முடியாது. அதை அம்பாரத்தில் ஏற்றி, பாதுகாத்து வைத்து அதன் பிறகே எள் உதிர ஆரம்பிக்கும். இந்த நடைமுறைச் சிக்கல் வெள்ளை எள் சாகுபடியில் இல்லை. வெள்ளை எள்ளுக்கு ஓரளவுக்கு நல்ல விலையும் கிடைக்கிறது. இதனால், இப்பகுதியில் வெள்ளை எள் அதிகம் சாகுபடி செய்யப்பட்டுள்ளது. இவ்வாறு அவர் கூறினார்.

**மஞ்சூரில் மழை: விவசாயிகள் ஆறுதல்**

மஞ்சூர் : மஞ்சூர் சுற்றுவட்டார பகுதியில் பெய்த மழையால் தேயிலை விவசாயிகள் மகிழ்ச்சியடைந்துள்ளனர்.

கடந்த மார்ச் மாதம் துவக்கத்திலிருந்து கோடை வெயில் தாக்கத்தால் கடும் வறட்சி ஏற்பட்டது. தண்ணீர் பற்றாக்குறை ஏற்பட்டதுடன், மலை காய்கறி விவசாயத்திற்கு போதுமான தண்ணீர் இல்லாமல் பாதிக்கப்பட்டது. றிப்பாக, தேயிலை விவசாயத்திற்கு மழை இல்லாததால் பசுந்தேயிலை வரத்து படிப்படியாக குறைந்ததுடன், ஞ்சூரில் தேயிலை செடிகளில் சிவப்பு சிலந்தி தாக்குதல் அதிகரித்தது. மழை வேண்டி ஒரு சில பகுதிகளில் சிறப்பு பூஜைகளும் நடந்தது. இந்நிலையில், மஞ்சூரில் கடந்த சில நாட்களாக இடி மின்னலுடன் பலத்த மழை பெய்தது. மலை காய்கறி விவசாயம், தேயிலை தோட்டங்களுக்கு ஏற்ற ஈரப்பதம் டைப்பதால் விவசாயிகள் மகிழ்ச்சி யடைந்தனர். மஞ்சூர் சுற்றுவட்டார பகுதிகளில் பெரும்பாலான இடங்களில் சாலை சீரமைப்பு பணிகள் நடந்து வருவதால், கனமழைக்கு சேறும் சகதியும் நிறைந்து எடக்காடு சாலையில் அடிக்கடி போக்குவரத்து பாதிக்கப்படுகிறது.

**வறட்சியால் பூந்தோட்டம் கருகும் அபாயம்: விளைச்சல் குறைவால் பூ விலை உயர்வு**

வாழப்பாடி: வாழப்பாடி பகுதியில் நிலவி வரும் கடும் வறட்சியால் பாசனத்திற்கு வழியின்றி பூந்தோட்டங்கள் காய்ந்து கருகி வருகின்றன. அதனால், பூக்கள் விற்பனைக்கு வரத்து குறைந்து, விலை இரு மடங்காக உயர்ந்துள்ளது. வாழப்பாடி மற்றும் அதன் சுற்றுப்புற கிராமங்களில், நீர்பாசன வசதி கொண்ட  நன்செய் நிலங்களில், நீண்ட கால பலன் தரும் பாக்கு, தென்னை, வெற்றிலை, கரும்பு, வாழை மற்றும் காய்கறிகளை விவசாயிகள் அதிகளவில் பயிரிடுகின்றனர். நீர்பாசன வசதியில்லாத வானம் பார்த்த பூமிகளான மானாவாரி புன்செய் நிலங்களில், வறட்சியை தாங்கி வளர்ந்து பலன் தரும் மரவள்ளி, கம்பு, சோளம், கேழ்வரகு, மக்காச்சோளம், சூரியகாந்தி, நிலக்கடலை மற்றும் பருத்தி ஆகியவற்றை பயிடுகின்றனர். வாழப்பாடி பகுதி கிராமங்களில் பூக்கள் சாகுபடிக்கு ஏற்ப மண்வளமும், சீதோஷ்ண நிலையும் காணப்படுவதால், ஓரளவுக்கு நீர்பாசன வசதி கொண்ட விவசாயிகளும் கூட ஆண்டு முழுவதும் கணிசமான வருவாய் கொடுக்கும் பூந்தோட்டம் அமைத்து பராமரிப்பதில் சில ஆண்டுகளாக அதிக ஆர்வம் காட்டி வருகின்றனர். சம்பங்கி உள்ளிட்ட ஓரிரு மலர் சாகுபடிக்கு தோட்டக்கலைத்துறை வாயிலாக அரசு மானியம் வழங்குவது, வாழப்பாடி பகுதியில் விவசாயிகள் மலர் சாகுபடி செய்வதை மேலும் ஊக்கப்படுத்தியது.  பல்வேறு பகுதிகளில் அரளி,சாமந்தி சாகுபடியும் அமோகமாக நடந்தது.

அதுமட்டுமின்றி, துளக்கமல்லி, குண்டுமல்லி, ஜாதிமல்லி, காக்கட்டான் மல்லி, கோழிக்கொண்டை பூ சாகுபடியும் வாழப்பாடி பகுதியில் அதிகரித்தது. அதனால் வாழப்பாடியில் பத்துக்கும் மேற்பட்ட கடைகளுடன் தினசரி பூ மார்க்கெட் தோன்றியது. வாழப்பாடி பஸ் ஸ்டாண்ட் பகுதியில் தினந்தோறும் கூடும் பூ மார்க்கெட்டிற்கு அனைத்து ரக பூக்களும் விற்பனைக்கு வந்தது. ஆனால், 6 மாதங்களுக்கு மேலாக வாழப்பாடி பகுதியில் மழை பொழிவு இல்லாததால், கடும் வறட்சி நிலவி வருவதோடு, நீர்நிலைகளும் வறண்டு வருகின்றன. நிலத்தடி நீர்மட்டமும் அடியோடு சரிந்து போனதால், பாசனத்திற்கு வழியின்றி பூந்தோட்டம் சுட்டெரிக்கும் வெயிலில் காய்ந்து கருகி வருகின்றன. அதனால், விவசாயிகள் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளனர். விளைச்சல் பாதிக்கப்பட்டதால், மல்லிகை, குண்டுமல்லி, கனகாம்பரம், துளக்கமல்லி, சம்பங்கி உள்ளிட்ட அனைத்து ரக பூக்களும் விற்பனைக்கு வரத்து குறைந்து விலை இரு மடங்காக உயர்ந்துள்ளது. கடந்த மாதம் வரை 40 ரூபாய்க்கு மட்டுமே விற்கப்பட்ட ஒரு கிலோ துளக்கமல்லி தற்போது 70 ரூபாய்க்கும், ஒரு கிலோ மல்லிகை , குண்டுமல்லி, கனகாம்பரம் 150 ரூபாய் முதல் 180 ரூபாய் வரையும் விலை போகிறது. பூக்கள் மற்றும் பூமாலைகளை விசேஷங்களுக்கே வாங்கி பயன்படுத்த முடியாத நிலை ஏற்பட்டுள்ளதால், நுகர்வோர்களும் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளனர். பூ வியாபாரி பழனிசாமி கூறுகையில், "வாழப்பாடி பூ மார்க்கெட்டிற்கு, கடந்த மாதம் வரை நாளொன்றுக்கு 300 கிலோ வரை பூக்கள் விற்பனைக்கு வந்தது. தற்போது 150 கிலோ வருவதே பெரிதாக இருக்கிறது. அதனால், விலை கடுமையாக உயர்ந்துள்ளது. வறட்சியால் பூந்தோட்டங்கள் கருகி காய்ந்து வருவதால், விவசாயிகள் மட்டுமின்றி வியாபாரிகளும்  நுகர்வோர்களும் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளனர். வருண பகவான் கருணை காட்டி மழை பெய்தால்தான், விளைச்சல் அதிகரித்து  பூக்களின் விலை குறையும். இல்லையெனில் மேலும் விலை உயரும் அபாயம் காத்திருக்கிறது," என்றார்.

**மேட்டூரில் சூறைகாற்றுடன் மழை**

மேட்டூர்: கோடை வெயிலால் அவதிப்பட்ட நிலையில் மேட்டூரில் நேற்று மாலை சூறைகாற்றுடன் பலத்த மழை பெய்தது பொதுமக்களை மகிழ்ச்சியில் ஆழ்த்தியது. மேட்டூரில் கடந்த ஒரு மாதமாக வெயிலின் தாக்கம் அதிகமாக இருந்தது. வாட்டி வதைக்கும் வெயிலால் பொதுமக்கள் பெரிதும் அவதிப்பட்டனர். மழையின்றி இரவில் கடும் புழுக்கத்தில் மக்கள் தவித்து வந்தனர். இரவில் அனல் காற்று வீசியதால், பெரும்பாலானவர்கள் தூக்கமின்றி தவித்தனர். இந்நிலையில், நேற்று மாலை மேட்டூர் சுற்றுப்பகுதியில் சூறைகாற்றுடன் திடீரென மழை பெய்தது. அரை மணிநேரம் நேரம் பெய்த பலத்த மழையினால் வெப்பம் தணிந்து குளிர் காற்று வீசியது பொதுமக்களை மகிழ்ச்சியில் ஆழ்த்தியது.

**வறட்சியால் வெற்றிலையில் நோய் தாக்குதல்: விவசாயிகள் அதிர்ச்சி**

ஆத்தூர்: வாடல், செவட்டை, கொன்னை நோய் தாக்கம் காரணமாக வெற்றிலை மகசூல் குறைந்துள்ளது. மேலும், கொளுத்தும் கோடை வெயிலில், வெற்றிலை வளர்ச்சியில்லாததால் விலையும் குறைந்திருப்பது விவசாயிகளை அதிர்ச்சிக்குள்ளாக்கியுள்ளது. ஆத்தூர் அதன் சுற்றுவட்டார பகுதிகளான பைத்தூர், கடம்பூர், மஞ்சினி, பெத்தநாயக்கன்பாளையம், நரசிங்கபுரம், தாண்டவராயபுரம், கூடமலை, செந்தாரப்பட்டி, தம்மம்பட்டி, ஆணையம்பட்டி உள்ளிட்ட பகுதிகளில் ஆயிரம் ஏக்கர் பரப்பளவில் வெற்றிலை பயிர் சாகுபடி செய்யப்படுகிறது. அதில் கருப்பு, வெள்ளை ரக வெற்றிலையை விவசாயிகள் கணிசமாக பயிர் செய்கின்றனர். ஆத்தூர் பகுதிகளில் விளைவிக்கப்படும் கருப்பு ரக வெற்றிலை, 'காரம்' மிகுந்து ருசியாக இருப்பதால், சேலம் மாவட்டம் மட்டுமின்றி கோவை, கடலூர், விழுப்புரம், சென்னை, பெங்களூரு, புதுச்சேரி போன்ற நகரங்களுக்கு அதிகளவில் அனுப்பி வைக்கப்படுகிறது.

ஆறு மாதங்களாக பருவமழையின்றி இருப்பதால், பாசன நீர்நிலைகளான ஏரி, ஆறு, விவசாய கிணறு உள்ளிட்ட நீர் நிலைகள் கடும் வறட்சிக்குள்ளாகியது. வெற்றிலையில், கோடை காலத்தில் வாட்டி எடுக்கும் கடும் வெயிலால் வாடல் நோய், செவட்டை, கொன்னை (இலை சுருட்டல்) நோய் தாக்கம் அதிகளவில் காணப்படுகிறது. நோய் தாக்கத்தினால் வெற்றிலையின் இலை சுருண்டு வளர்ச்சியில்லாமலும், அவற்றை பறித்து விற்பனை செய்ய முடியாத சூழல் ஏற்பட்டுள்ளது. நோய் தாக்கதுக்குள்ளான, 'பீடா' வெற்றிலைகளை அறுவடை செய்ய முடிவதில்லை. பருவ காலத்தில் மழையில்லாமல் இருப்பதால் வெற்றிலை பயிர்கள் காய்ந்து கருகியும், நோய் தாக்கம் தீவிரமடைந்துள்ளது. விளைச்சல் குறைவு காரணமாக கடந்த மாதம் கவுலி தலா 40 ரூபாய் என 60 கவுலி கொண்ட ஒரு ஒத்து 800 முதல் 2,000 ரூபாய் வரை விலை உயர்ந்தது. தற்போது நோய் தாக்கம் தீவிரம் மற்றும் விளைச்சல் பாதிப்பு காரணமாக கவுலி 5 முதல் 10 ரூபாய்க்கும், 60 கவுலி கொண்ட ஒரு ஒத்து 500 முதல் 900 ரூபாய்க்கு விற்பனையாகிறது.
விளைச்சல் பாதிப்பால் ஒரு ஏக்கரில் சாராசரியாக 50 கவுலி மகசூலுக்கு 25 கவுலிகள் வரை தான் கிடைக்கிறது. இதுகுறித்து ஆத்தூர் வெற்றிலை விவசாயி காசியப்பன் கூறியதாவது: வெற்றிலை நடவு செய்த ஒராண்டில் இலைகள் பறித்து விற்பனை செய்யப்படுகிறது. ஏக்கருக்கு 30 நாட்களுக்கு ஒரு முறை 20 ஒத்து என பருவ கால ஆண்டிற்கு நூறு ஒத்து வரை உற்பத்தி இருக்கும். தற்போது கோடை வெயிலால் வாடல், கொன்னை, செவட்டை நோய் தாக்கம் ஏற்பட்டது.
நோய் தாக்கத்துள்ளாகிய, 'பீடா' வெற்றிலைகள் பறிக்க முடிவதில்லை. மார்க்கெட்டில் பீடா வெற்றிலை தலா ஒத்து 400 ரூபாயும், கழிவு வெற்றிலை 200 ரூபாயும், சக்கை வெற்றிலை 150 ரூபாயும் விற்கப்படுகிறது. பீடா வெற்றிலையில் தரம் வாய்ந்தவை விலை கூடுதலாக உள்ளது. கவுலி 5 முதல் 10 ரூபாய் வரை விலை உள்ளது. சுருட்டல், செவட்டை, வாடல் நோய் பாதித்த வெற்றிலைகள் காய்ந்து கருகுவதால் கீழே பறித்து போடப்படுகிறது. வெற்றிலை பயிருக்கு அரசு எவ்வித நிவாரணமும் வழங்குவதில்லை, மழையில்லாமல் வறட்சியால் பல ஆயிரம் ரூபாய் வரை நஷ்டம் ஏற்பட்டுள்ளது. இவ்வாறு அவர் கூறினார். ஆத்தூர் வெற்றிலை வியாபாரிகள் கூறுகையில், 'தமிழகளவில் ஆத்தூர் வெற்றிலை மார்க்கெட்டில் நாள்தோறும் 500 ஒத்துக்கு மேலான வெற்றிலை விற்பனைக்கு கொண்டுவரப்படும். தற்போது நோய் தாக்கம், பருவமழையின்மையால் 200 ஒத்து வரை வருகிறது' என, கூறினர். நோய் தாக்கத்தினால் உற்பத்தி பாதிப்பு மற்றும் விலையின்மையால் வெற்றிலை விவசாயிகள் பெரிதும் கவலையடைந்துள்ளனர்.

### 50 சதவீதம் நெல் விளைச்சல் பாதிப்பு கால்வாய் சீரமைக்காததால் வந்த வினை

சிவகங்கை:வைகை அணையில் இருந்து கண்மாய்களுக்கு நீர் வரும் கால்வாய்கள், புதர் மண்டிக்கிடக் கின்றன. இவற்றை சீரமைக்காததால், நெல் உற்பத்தி 50 சதவீதம் பாதிக்கப் பட்டுள்ளது.மானாமதுரை, திருப்புவனம் பகுதி கண்மாய்களுக்கு வைகை அணையில் இருந்து தண்ணீர் கொண்டு வர, விரகனூர் பிராதான கால்வாய்கள் அமைக்கப்பட்டன. இத்திட்டம் விவசாயத்திற்கு மிகவும் கைகொடுத்தது.

அணையின் வலது கால்வாய் வழி 27 கண்மாய்கள்; இடது கால்வாய் வழி 60 கண்மாய் களுக்கு தண்ணீர் திறக்கப்படுகிறது. இக்கால்வாய்கள் தற்போது புதர் மண்டிகிடக்கின்றன. கடந்த ஆண்டு வைகையில் இருந்து நான்கு நாட்கள் தண்ணீர் திறக்கப்பட்டது.பாதிப்பு: ஆனால், கண்மாய்களுக்கு தண்ணீர் முழுமையாக வரவில்லை. இவற்றை நம்பியுள்ள 40 ஆயிரம் ஏக்கர் விவசாய நிலங்களுக்கு, போதிய தண்ணீர் கிடைக்கவில்லை.

வழக்கமாக, ஒரு ஏக்கரில் நான்கு டன் நெல் விளைச்சல் கிடைக்கும். தண்ணீர் பற்றாக் குறையால் கடந்த ஆண்டு, சராசரியாக இரண்டு டன் மட்டுமே விளைந்துள்ளது. இதனால், இப்பகுதியில் நெல் உற்பத்தி 50 சதவீதம் குறைந்துள்ளது.

சீரமைப்பு எப்படி?: ஆற்றின் அளவை மையமாக வைத்து, இரண்டு அடி வரை வரத்து கால்வாயை ஆழப்படுத்த வேண்டும். மழை காலங்களில் கால்வாயில் அடைப்பை சரி செய்ய வேண்டும். அகல வாக்கிலும் சீர் செய்ய வேண்டும். அள்ளப்படும் மண்ணை கொட்டி, கரைகளை பலப்படுத்தி, உயரத்தையும் அதிகரிக்க வேண்டும் என, பொதுப்பணி துறையில் வழிமுறைகள் கூறப்பட்டுள்ளன. ஆனால், இதன்படி தூர் வாரப்படுகிறதா? என்பது, அதிகாரிகளுக்கே வெளிச்சம்.

இதுகுறித்து விவசாய சங்க தலைவர் ஆதிமூலம் கூறுகையில், கால்வாய்களை முறை யாக சீரமைப்பதில்லை. அதில் உள்ள செடி, கொடிகளை மட்டும் அகற்றி, தூர் வாரியதாக கணக்கு காண்பிக்கின்றனர். இதனால், கண்மாய்களுக்கு முழுமையாக தண்ணீர் செல்வ தில்லை. கடந்த ஆண்டு நான்கு நாட்கள் திறக்கப்பட்டும், பாதி கண்மாய்கள் கூட நிறையவில்லை. இதனால் நெல் விளைச்சல் குறைந்துள்ளது.

சீரமைப்பு பணிகள் நடக்கும் போது திட்ட மதிப்பீடு உள்ளிட்ட விபரங்கள் கொண்ட போர்டு வைக்க வேண்டும். ஆனால், எங்கும் வைக்கப்படுவதில்லை," என்றார்.பொதுப்பணி துறை செயற்பொறியாளர் செல்வராஜ் கூறுகையில்,அணையின் வலது புற கால்வாயில் மட்டும் 25 லட்ச ரூபாயில் சீரமைக்கும் பணி நடந்துள்ளது. சில இடங்களில் பணிகள் முடிவடையவில்லை. இடது புற கால்வாய்க்கு நிதி ஒதுக்கீடு இல்லை. பணிகளில் முறைகேடு நடக்கவில்லை," என்றார்.

**100 நாள் வேலை திட்டத்தை உயர்த்தனும் விவசாய தொழிலாளர் சங்க மாநாட்டில் தீர்மானம்**

தஞ்சாவூர்: 'கிராமப்புற 100 நாள் வேலைத்திட்டத்தை 200 நாட்களாக உயர்த்தி வேலை வழங்க வேண்டும்' என்று தஞ்சாவூரில் அகில இந்திய விவசாய தொழிலாளர் சங்கம் சார்பில், மாவட்ட மாநாட்டில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. மாவட்ட தலைவர் பாலசுப்பிரமணியன் தலைமை வகித்தார். மாவட்ட துணைத் தலைவர் காளிதாஸ் கொடியேற்றினார். மாவட்ட துணைச் செயலாளர் சிவகாமி அஞ்சலி தீர்மானம் படித்தார். மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் மாவட்ட செயலாளர் நீலமேகம் மாநாட்டை துவக்கி வைத்தார். பிற சங்க நிர்வாகிகள் பக்கிரிசாமி, பாஸ்கர், மனோகரன், சாமிநடராஜன் உட்பட பலர் பேசினர். கிராமப்புற 100 நாள் வேலைத்திட்டத்தை 200 நாட்களாக உயர்த்தி வேலை வழங்க வேண்டும். 100 ரூபாய் கூலியை 150 ரூபாயாக உயர்த்த வேண்டும். மாவட்டத்தில் உள்ள 589 பஞ்சாயத்துக்களிலும் 100 நாள் வேலை திட்டம் அமல்படுத்த வேண்டும். கூலியை குறைத்து வழங்குதல் உட்பட முறைகேடுகளை சரி செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும்.

பூதலூர் யூனியன் செங்கிப்பட்டி பகுதியில் 100 நாள் வேலை திட்டத்தின் அடிப்படையில் 100க்கும் மேற்பட்ட பாசன ஏரிகளை தூர்வார வேண்டும். 100 நாள் வேலைத்திட்டத்தை நகர்ப்புறத்துக்கும் விரிவுபடுத்த வேண்டும். விவசாய தொழிலாளர்கள் அனைவருக்கும் குடிமனை பட்டா வழங்க வேண்டும். நீர்வழி, நீர் நிலை புறம்போக்கு எனக்கூறி நிராகரிக்கப்படுவதை தவிர்த்து, பட்டாவுடன் மாற்று இடம் வழங்க வேண்டும். மதுக்கூர் யூனியன் அத்திவெட்டி

பஞ்சாயத்துக்கு உட்பட்ட காந்தி நகரில் 150 பேருக்கு பட்டா வழங்கப்பட்டுள்ளது. அந்த இடத்தை அளந்து கொடுக்க வேண்டும். தமிழக அரசு அறிவித்துள்ள 21 லட்சம் கூரை வீடுகளை காங்கிரீட் வீடுகளாக கட்டும் திட்டத்தை வரவேற்கிறோம். அதே நேரம், ஒரு வீட்டுக்கு 60 ஆயிரம் ரூபாய் நிதி என்பதை மாற்றி ஒரு லட்சம் ரூபாயாக உயர்த்த வேண்டும்.

புறம்போக்கில் குடியிருக்கும் அனைத்து விவசாய தொழிலாளர்களுக்கும் குடிமனை பட்டாவுடன் கூடிய காங்கிரீட் வீடுகள் அல்லது மாற்று இடம் வழங்கி காங்கிரீட் வீடுகள் கட்டித்தர வேண்டும். மாவட்டம் முழுவதும் பழுதடைந்துள்ள அனைத்து தொகுப்பு வீடுகளுக்கும் தனி நிதி ஒதுக்கீடு செய்து சீரமைக்க வேண்டும். விவசாயிகள், விவசாயத் தொழிலாளர்கள் உரிமைக்காக போராடிய தியாகிகள் வாட்டக்குடி இரணியன், சிவராமன், ஆறுமுகம் ஆகியோர் நினைவிடத்தை இடித்த பட்டுக்கோட்டை நகராட்சி நிர்வாகத்தை கண்டித்தல். உடன் அதே இடத்தில் நினைவு இடத்தை அமைக்க வேண்டும்.

விவசாய தொழிலாளர்கள் அனைவருக்கும் நலவாரிய அட்டை வழங்க வேண்டும். நலவாரியத்தை முறையாக செயல்படுத்த வேண்டும். 60 வயது நிரம்பிய ஆண், பெண் அனைவருக்கும் பென்ஷன் வழங்க வேண்டும். இலவச 'டிவி' வழங்கிய அனைத்து விவசாய தொழிலாளர்கள் வீடுகளுக்கும் இலவச மின்சாரம் வழங்க வேண்டும், என வலியுறுத்தி தீர்மானம் நிறைவேற்றினர். மாநிலக்குழு உறுப்பினர் பழனிவேலு நன்றி கூறினார்.

**தஞ்சை, நாகை, திருவாரூர் குத்தகை விவசாயிகள் மாநாடு**

கும்பகோணம்: தஞ்சை, நாகை, திருவாரூர் மாவட்ட குத்தகை விவசாயிகள் மாநாடு கும்பகோணத்தில் நடந்தது. குத்தகை விவசாய சங்க மாவட்ட செயலாளர் மலையாண்டி தலைமை வகித்தார். மாவட்ட தலைவர் நடராஜன், மாவட்ட குழு உறுப்பினர்கள் அய்யாசாமி, தேவசகாயநாதன், தமிழக அனைத்து விவசாயிகள் முன்னேற்ற சங்க மாவட்ட செயலாளர் பாலகிருஷ்ணன், குத்தகை விவசாயிகள் சங்க நிறுவனர் வெள்ளைச்சாமி, மூத்த வக்கீல் துரைபேல்ராஜ் ஆகியோர் முன்னிலை வகித்தனர். தமிழக அரசு குத்தகை தள்ளுபடி சட்டங்களை இயற்ற வற்புறுத்துவது. குத்தகை விவசாயிகளின் குத்தகை நிலத்தில் மின் மோட்டார், பம்பு செட்டுகள் அமைத்து கொள்ள அனுமதிக்க வேண்டும். குத்தகை தள்ளுபடி சட்டங்கள் வரும்வரை ரெவின்யூ நீதிமன்றத்தை மூடி வைக்க வேண்டும் என்பது உள்ளிட்ட தீர்மானங்கள் மாநாட்டில் நிறைவேற்றப்பட்டன.

**செம்மை நெல் சாகுபடிசெயல் விளக்க உழவர் விழா**

குடியாத்தம்: குடியாத்தம் வட்டார வேளாண்மைத் துறையின் ஒருங் கிணைந்த உணவு, தானிய உற்பத்தி திட்டத்தின் கீழ் செம்மை நெல் சாகுபடி செயல்விளக்க உழவர் விழா பாக்கம் கிராமத்தில் நடந்தது.
வேளாண்மை துறையின் ஒருங்கிணைந்த உணவு தானிய உற்பத்தி திட்டத்தின் கீழ் செம்மை நெல் சாகுபடி செயல்விளக்கம் ஒரு கிராமத்தில் விவசாயிக்கு, ஒரு எக்டர் வீதம் 30 விவசாயிகளுக்கு அமைக்கப்பட்டது. இதில் பாக்கம் கிராமத்தை சேர்ந்த ஜீவானந்தம் என்ற விவசாயியின் நிலத்தில் அமைக்கப்பட்டு, அதில் உழவர் விழா நடத்தப்பட்டது.விழாவுக்கு குடியாத்தம் வட்டார வேளாண்மை அலுவலர் சுஜாதா தலைமை வகித்து செம்மை நெல் சாகுபடியின் முக்கியத்துவம் மற்றும் மகசூல் எடுக்கும் வழிமுறைகள் குறித்து பேசினார். இதில் ஏராளமான விவசாயிகள் கலந்து கொண்டனர்.உதவி வேளாண்மை அலுவலர் ஜெயக்குமார் நன்றி கூறினார்.

**கால்நடை காப்பீட்டு திட்டத்தில் பயனடைய இன்று கடைசிநாள்**

வேலூர்: கால்நடை காப்பீட்டுத் திட்டத்தில் மாடுகளுக்கு இன்சுரன்ஸ் செய்யும் சிறப்பு முகாம்கள் இன்றுடன் முடிவடைகிறது. இதுவரை மாடுகளுக்கு இன்சுரன்ஸ் செய்யாமல் இருக்கும் கால்நடை வளர்ப்போர், கால்நடை மருத்துவமனைகளுக்கு சென்று இன்சுரன்ஸ் செய்து பயன் பெறலாம்.கால்நடை காப்பீட்டு திட்டத்தின் கீழ் மாடுகளுக்கு இன்சுரன்ஸ் செய்யும் சிறப்பு முகாம்கள் மாவட்டம் முழுவதும், அந்ததந்த பகுதிகளில் உள்ள கால்நடை மருத்துவமனைகளில் கடந்த 15ம் தேதி தொடங்கி, இன்றுடன் நிறைவு பெறுகிறது.சிறப்பு முகாமில் மாடுகளுக்கு இன்சுரன்ஸ் செய்ய பிரிமியம் தொகையில் மூன்றில் ஒரு பங்கு செலுத்தினால் மட்டும் போதும். மீதி தொகையை அரசு செலுத்துவிடும். உதாரணமாக ரூ. 10 ஆயிரத்துக்கு இன்சுரன்ஸ் செய்யப்படும் மாடுகளுக்கு பிரிமிய கட்டணமாக ரூ. 150 மட்டும் செலுத்தினால் போதும்.

கால்நடை காப்பீட்டுத் திட்டத்தில் மாடுகளுக்கு இன்சுரன்ஸ் செய்யும் முகாம் இன்று (31ம் தேதி ) முடிவடைகிறது. கடைசி நாளான இன்று அந்தந்த பகுதியில் உள்ள கால்நடை மருத்துவமனைக்கு மாடுகளை கொண்டு சென்று இன்சுரன்ஸ் செய்து கொள்ளலாம்.இது குறித்து கால்நடைத்துறை மருத்துவ அதிகாரிகள் கூறியதாவது: தமிழக அரசு சார்பில் கால்நடை காப்பீட்டு திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இந்த திட்டத்தில் சென்ற ஆண்டு வேலூர் மாவட்டத்தில் 20 ஆயிரம்கால்நடைகளுக்கு (மாடுகள்) பிரிமியத் தொகை செலுத்தி, இன்சுரன்ஸ் செய்யப்பட்டது. இதில் 2ஆயிரத்து 500 மாடுகள் இறந்தன. அதற்கான இன்சுரன்ஸ் தொகையாக ரூ.5 கோடி ரூபாய் அரசிடமிருந்து பெறப்பட்டு கால்நடை வளர்ப்போர்களுக்கு வழங்கப்பட்டது. இந்த ஆண்டு இந்த திட்டத்தில் கீழ் காப்பீடு செய்ய இன்றே கடைசி நாளாகும். கால்நடை வளர்ப்போர் இந்த சந்தர்ப்பத்தை பயன்படுத்திக் கொள்ளலாம். இவ்வாறு கால்நடைத்துறை அதிகாரிகள் கூறினர்.

**வாழவந்தான்குப்பம் கிராமத்தில் கரும்பு வயலில் செயல் முறை**

கள்ளக்குறிச்சி : கச்சிராயபாளையம் கோமுகி சர்க்கரை ஆலை சார்பில் தியாகதுருகம் கோட்டம், சிறுநாகலூர் பிரிவு வாழவந்தான் குப் பம் கிராமத்தில் கரும்பு வயலில் வயல் விழா மற் றும் செயல்முறை விளக் கக் கூட்டம் நடந்தது.ஆட்சியர் சேகர் தலைமை தாங்கினார். கரும்பு அறுவடை இயந் திரங்கள் மூலம் அறுவடை செய்வதற்கு தேவையான அகலப்பார் அமைத்து நடவு செய்யும் முறை விளக்கி கூறப்பட்டது. செங்கல் பட்டு உயிரியல் ஆய்வு மைய விஞ்ஞானி முனைவர் வடிவேலு கரும்பில் உயிர் உரங்கள் என்ற தலைப்பில் பேசினார்.

மறுதாம்பு பராமரிப் பில் கடைபிடிக்க வேண் டிய முக்கிய தொழில் நுட் பங்கள் குறித்து கோட்ட கரும்பு அலுவலர் ராஜேந் திரன் விளக்கினார். கரும்பு பெருக்கு அலுவலர் ஆன்ட்ரன் சேவியர் அருள் தொழில் நுட்ப உரையில் கரும்பு சாகுபடியில் யந்திரங்களின் பயன்பாடு பற்றி பேசினார். கூட்ட முடிவில் ஆட் சியர் சேகர் பேசுகையில், தியாகதுருகம் கோட் டம் நடப்பு அரவைப் பருவத்தில் பதிவு கரும்பு முழுவதையும் ஆலை அரவைக்கு அனுப்பி வைத்ததற்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். நடப்பு அரவை பருத் திற்கும், எதிர்வரும் அரவை பருவத்திற்கும் தமிழக அரசு கூடுதல் விலை அறிவித்திருப்பதால், எதிர்வரும் அரவை பருவத்தில் அதிக அள வில் கரும்பு நடவு செய்து ஆலைக்கு அனுப்பி வைக்க வேண்டும் என் றார். சுந்தரமூர்த்தி நன்றி கூறினார்.

**பருப்பு விலை அதிகரிக்கும் வாய்ப்பு**

திருப்பூர் : பருப்பு வரத்து முற்றிலும் குறைந்து, விலை அதிகரிக்கும் வாய்ப்பு ஏற்பட்டுள்ளது. உள் நாட்டு பருப்புகளின் வரத்து இனி இருக்காது என்பதால், விலை அதிகரிக்கத் துவங்கியுள்ளது.தினசரி மார்க்கெட் சங்க தலைவர் பாலசுப்ரமணியம் கூறியதாவது:பருப்பு வரத்து குறைவாகவே உள்ளது. துவரம் பருப்பு வரத்து முற்றிலும் குறைவு; உள்நாட்டு உற்பத்தி குறைந்துள்ளது. வெளி நாடுகளில் இருந்து பருப்பு இறக்குமதி செய்யப்படும் சூழலில் தான் விலை

இறங்கும் வாய்ப்புள்ளது. துவரம் பருப்பு கிலோவுக்கு நான்கு ரூபாய் அதிகரித்து 68 ரூபாய்; பச்சப் பயிறு 72; பாசிப் பருப்பு 86; கருப்பு உளுந்து 64; வெள்ளை உளுந்து 75; கொள்ளு 30; தட்டப்பயிறு 44; சுண்டல் கடலை 35; அஸ்கா 33 ரூபாய்க்கு விற்கப்படுகிறது, என்றார்.

**பூ வரத்து குறைவு; தொழில் பாதிப்பு**: பூக்களின் வரத்து குறைந்து கொண்டே வருவதால், பூ வியாபாரிகள் பாதிக்கும் சூழல் உருவாகியுள்ளது. கொளுத்தும் வெயிலால் பூக்களின் விளைச் சலும் பாதிக்கப்பட்டுள்ளது. பூ வியாபாரிகள் சங்க செய லாளர் சக்திவேல் கூறியதாவது: கோடை வெயில் துவங்கி விட் டதால், பூக்களின் விளைச்சல் மிகவும் பாதிக்கப்பட்டுள்ளது. விற்பனைக்கு தேவையான பூக் கள் வருவதில்லை. போதிய வியா பாரம் இல்லாமல், வியாபாரிகள் பாதிக்கப்படும் நிலை உருவாகி யுள்ளது. குறைந்த பூக்களை கொண்டு, பற்றாக்குறையான வருவாய் தான் ஈட்ட முடியும். இதே நிலை நீடித்தால், பூ தொழில் நலிவடையும். ஆண்டுதோறும் ஆர்டரின் பேரில், ஒரே விலையில் விற் பனை செய்யும் வியாபாரிகள், பூக்களின் பற்றாக்குறையால் அதிக விலை கொடுத்து வாங்கும் சூழல் உள்ளது. தொழிலில் நஷ் டம் ஏற்படும் வாய்ப்பு உள்ளது. சிறு வியாபாரிகள் அதிகம் பாதிக்கப்படுவர். மல்லிகை கிலோ 100; அரளி 100; முல்லை 200; கனகாம்பரம் 140; சம்பங்கி 140; செவ்வந்தி 120; மாலை பெரியது 250, சிறியது 50 முதல் 60 வரை விற்பனை செய்யப் படுகிறது, என்றார்.

**முட்டை விலையில் 10 காசு இறங்கியது**: முட்டை வியாபாரி லோகநாதன் கூறுகையில், "பள்ளிகளுக்கு டுமுறை, கோடைகாலம் என்பதால் முட்டை விற்பனை குறைந்துள் ளது. இதை சமாளிக்க விலை குறைந்து கொண்டே வருகிறது. கடந்த ஒரு வாரத்தில் முட்டை ஒன்றுக்கு 10 காசுகள் வரை குறைந்துள்ளது. கொள்முதல் விலையில் 2.15 ரூபாய்; மொத்த விற்பனை 2.20; சில்லரை விற்பனையில் 2.50 என விற்பனையாகிறது," என்றார்.கிலோ தக்காளி 10 ரூபாய்: காய்கறி வியாபாரி சரவணன் கார்த்தி கூறியதாவது: தக்காளி வரத்து குறைந்துள்ளதால், விலை சிறிது அதிகரித்துள்ளது. வரும் நாட்களில் வெயில் அதிகளவில் இருந்தால், காய்கறி வரவு பாதிக்கப்படும். மேரக்காய் வரத்து குறைந்துள்ளது; இஞ்சி வரத்து குறைந்து, கிலோவுக்கு 10 ரூபாய் அதிகரித்துள்ளது.

தக்காளி கிலோ 10 ரூபாய்; வெங்காயம் பெரியது மற்றும் சிறியது 10; கேரட் 30; பீன்ஸ் 30; கத்தரிக்காய் 30; பூசணி மற்றும் அரசாணி 10; உருளை 10; அவரை 30; கோஸ் 12; ப.மிளகாய் சம்பா 20, குண்டு மிளகாய் 34; பாகை 20; சேனை 25; புடலை 15; பீர்க்கன் காய் 30; பீட்ரூட் 15; கீரை வகை கள் கட்டு ஒரு ரூபாய்; கொத்த மல்லி கட்டு நான்கு ரூபாய்; கறி வேப்பிலை கிலோ 30; எலு மிச்சை பழம் ஒன்று நான்கு ரூபாய் வரை விற்பனையாகிறது, என்றார்.

**ஏப்ரலுக்கு பின் தங்கம் ஜொலிக்கும்:** திருப்பூர் தங்க நகை வியாபாரிகள் சங்கத்தினர் கூறுகையில், 'ஏப்., மாதத்துக்கு பின், தங்கம் விலை மற்றும் விற்பனை சீரடையும். கடந்த செவ்வாய்க்கிழமை ஒரு கிராம் தங்கம் 1,555 ரூபாய்; வியாழன் 1,540; சனி 1,550; திங்கள் 1,550 ரூபாயாக விற்பனையானது; இன்றும் (நேற்று) அதே விலை நீடிக்கிறது. பவுன் 12,400 ரூபாய்; வெள்ளி கிராம் 28.50 ரூபாய்க்கு விற்பனையாகிறது', என்றார்.

**ஆயில் வரத்து குறைவு:** திருப்பூர் சமையல் ஆயில் வியா பாரிகள் சங்க தலைவர் சந்திரன் கூறுகையில், "ஆயில் விற்பனை யில் அதிக மாற்றமில்லை. ஆயில் வரத்து குறைவாக உள்ளது. நல்லெண்ணெய் கிலோ 91 ரூபாய்; கடலை எண்ணெய் இரண்டு ரூபாய் அதிகரித்து 75; ரீபண்டு ஆயில் 83; சூரியகாந்தி எண்ணெய் 60; விளக்கெண் ணெய் 80; தேங்காய் எண்ணெய் 60; பாமாயில் 45; நெய் 280 ரூபாய்க்கு விற்கிறது", என்றார்.

**விவசாய தொழிலாளர்கள் நல வாரியத்தில் தொழிற்சங்க பிரதிநிதிக்கு வாய்ப்பு தேவை'**

திருப்பூர் : 'விவசாய தொழிலாளர்களுக்கான நல வாரிய பணியில், விவசாய தொழிற்சங்க பிரதிநிதிகளுக்கு வாய்ப்பு அளிக்க வேண்டும்' என, கோரிக்கை வைக்கப்பட்டுள்ளது. தமிழ் மாநில விவசாய தொழிலாளர் சங்கத்தின் மாவட்ட குழு

கூட்டம் நடந்தது; மாவட்ட தலைவர் அய்யாவு தலைமை வகித்தார்.நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள்:இலவச கான்கிரீட் வீடு கட்டும் திட்டத்துக்காக, குடிசை வீடுகள் கணக்கெடுக்கும் பணி நடக்கிறது. கோவில், த்டம், மசூதி, சத்திரம் மற்றும் அறநிலையத்துறை இடங்களில் வசிக்கும் ஏழை மக்களை நில உரிமையாளர்களிடம் 'மறுப்பின்மை' சான்று பெற்று வருமாறு நிபந்தனை த்திக்கப்பட்டுள்ளது. இதனால், அத்திட்டம் ஏழை மக்களுக்கு கிடைக்க வாய்ப்பில்லை. அனைவருக்கும் வீட்டுமனை பட்டா வழங்கி, கான்கிரீட் வீடுகள் கட்ட வேண்டும்; தொகுப்பு வீடுகள் பழுதடைந்து, வீடுகள் இடிந்து உயிரிழப்புகளும் ஏற்பட்டுள்ளன. போதிய நிதி ஒதுக்கீடு செய்து புனரமைப்பு பணிகள் செய்ய வேண்டும். விவசாய தொழிலாளர் நல வாரிய பணிகள், வருவாய்த்துறையிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன.

அரசின் பணிகளுக்கு இடையே நலவாரிய பணிகள் பின்னுக்குத் தள்ளப்படுகின்றன. தொழிற்சங்க பிரதிநிதிகளையும் வாரியத்தில் இணைக்க வேண்டும்; வாடகை வீட்டில் வசிப்பவர், வீட்டின் உரிமையாளர்களிடம் வாடகை பத்திரம் பெற்றுத்தர வேண்டும். இந்நிபந்தனையால் ரேஷன் கார்டு பெற முடியாமல் உள்ளனர். நிபந்தனைகளை நீக்கி, வழிமுறைகளை எளிமைப்படுத்த வேண்டும். எடை குறையாமல் இருக்க, நவீன எலக்ட்ரானிக் தராசுகளை பயன்படுத்த வேண்டும். சாதி மறுப்பு, தீண்டாமை ஒழிப்பு மாநில சிறப்பு மாநாடு, சிதம்பரத்தில் ஏப்., 24ல் நடக்கிறது; திருப்பூர் மாவட்டத்தில் இருந்து 500 பேர் பங்கேற்க வேண்டும். விவசாய தொழிலாளர்களுக்கு நிலம் வழங்க அரசுக்கு கோரிக்கை வைத்தும், தாராபுரம் வட்டம் தளவாய் பட்டிணத்தில் நில உச்சவரம்பு உபரி நிலத்தை மீட்பதற்காக நில மீட்பு போராட்டம் நடத்துவது என, தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. மாநில செயலாளர் பெரியசாமி, மாவட்ட செயலாளர் பழனிசாமி, துணை செயலாளர்கள் தருமன், ரகுபதி, பழனிசாமி, அசோகன், விஸ்வநாதன் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

**பருப்பு கழிவில் ஊட்டச்சத்து பொருட்கள் : சர்க்கரை நோயாளிகளுக்கு வரப்பிரசாதம்**

*மார்ச்* 31,2010,00:00  IST

மதுரை : பருப்பு கழிவுகளை புரோட்டீன் சத்தாக மாற்றி, சர்க்கரை நோயாளிகளுக்கென பிஸ்கட், கூல்டிரிங்ஸ் தயாரிக்க, மதுரை சங்கங்கள் முன்வந்துள்ளன.

தஞ்சாவூரில் உள்ள இந்திய பயிர் பாதுகாப்பு தொழில்நுட்ப மையத்தைச் சேர்ந்த ஆராய்ச்சியாளர் ஜெகன்மோகன், பருப்பு கழிவிலிருந்து புரோட்டீன் சத்தை உருவாக்கலாம் என, கண்டறிந்தார். கழிவிலிருந்து சர்க்கரை நோயாளிகளுக்கான பிஸ்கட், கூல்டிரிங்சை தயாரிக்க முடியும் எனவும், நிரூபித்தார். தற்போது, கர்நாடகாவில் இது செயல்படுத்தப்படுகிறது. மதுரையிலும் இதை செயல்படுத்த, கடந்த வாரம் ஜெகன்மோகனுடன் பருப்பு வியாபாரிகள் சங்கம், வேளாண் உணவுத்தொழில் வர்த்தக சங்கம், உணவுப்பொருள் வியாபாரிகள் சங்க நிர்வாகிகள் ஆலோசனை நடத்தினர். பருப்பு வியாபாரிகள் சங்கச் செயலர் வெற்றிச்செல்வன் கூறுகையில், "இதுவரை பருப்பு கழிவுகள் மாட்டுத்தீவனமாக பயன்படுத்தப்பட்டன. கிலோ எட்டு ரூபாய் வரை விற்கப்படுகிறது. ஊட்டச்சத்தாக மாற்றும்போது கிலோ 35 ரூபாய் வரை விற்கப்படலாம். மூன்று சங்கங்களும் இணைந்து, இதை தயாரிக்க உள்ளோம். அடுத்த கட்ட ஆலோசனை ஏப்., 15 ல் நடக்க உள்ளது," என்றார்.

**சின்ன சின்ன செய்திகள்**

*மார்ச்* 30,2010,15:56   IST

---

வேளாண்மைத்துறைமானியத்திட்டங்கள்- 2009-10: மதுரை மாவட்டத்தில் வேளாண்மைத்துறை மூலம் மத்திய, மாநில நிதியுதவியுடன் செயல்படுத்தப்படும் திட்டங்கள் - பயிர் விளைச்சல் போட்டி, ஒருங்கிணைந்த தானிய அபிவிருத்தி திட்டம், ஐசோபாம் - எண்ணெய் வித்துப்பயிர்கள், மக்காச்சோள பயறுவகைகள், தீவிர பருத்தி பெருக்கத்திட்டம்,

தென்னை வளர்ச்சி வாரியம், விதை கிராமத்திட்டம், தேசிய வேளாண் வளர்ச்சித் திட்டம், ஆத்மா திட்டம், நீர்வள நிலவளத்திட்டம், தேசிய வேளாண் காப்பீட்டுத் திட்டம்,தேசிய மானாவாரி நீர்வடிப்பகுதி மேம்பாட்டுத்திட்டம், தமிழக முதல்வரின் நிலமற்ற ஏழை விவசாயத் தொழிலாளர் குழுமங்களுக்கு அரசு தரிசுநிலம் இலவசமாக வழங்கும் திட்டம் ஆகியவையாகும். மேலும் விபரங்களுக்கு வேளாண்மை இணை இயக்குனர், மதுரை.

ஐசோபாம் - எண்ணெய்வித்துகள்: இந்த திட்டத்தில் பயனாளியின் தகுதி -எண்ணெய் வித்துக்கள் சாகுபடி செய்யும் சிறு, குறு/ இதர விவசாயிகள்.

**திட்ட விபரம் மானியம்**

ஆதார விதை உற்பத்தி ரூ.10/ கிலோ

சான்று விதை உற்பத்தி ரூ.10/ கிலோ

சான்று விதை வினியோகம் 50 சதம் (அ) ரூ.12/கிலோ

பைப்லைன் அமைத்தல் ரூ.15,000/யூனிட்

**ஒட்டுமொத்த செயல்விளக்க திடல் அமைத்தல்**

(5 எக்டர் நிலக்கடலை) ரூ.4,000/- திடல்

ஒருங்கிணைந்த பூச்சி

நிர்வாகத்திடல் அமைத்தல் ரூ.22,680/- திடல்

(10 எக்டர்) (30 விவசாயிகள்)

ஜிப்சம் வினியோகம் ரூ.750/எக்டர்

உயிர் உரங்கள் ரூ.100/- எக்டர்

மேலும் விபரங்களுக்கு தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி: கிராம அளவில்: வேளாண்மை உதவி அலுவலர் அலுவலகம்: வேளாண்மை விரிவாக்க மையம், வேளாண்மை உதவி இயக்குனர். வட்டார அளவில்: துணைவேளாண்மை அலுவலர், வேளாண்மை அலுவலர், வேளாண்மை உதவி இயக்குனர். அலுவலகம்: வேளாண்மை விரிவாக்க மையம், வேளாண்மை உதவி இயக்குனர். மாவட்ட அளவில்: வேளாண்மை துணை இயக்குனர், வேளாண்மை இணை இயக்குனர். அலுவலகம்: வேளாண்மை இணை இயக்குனர் அலுவலகம்.

**-டாக்டர் கு.சௌந்தரபாண்டியன்.**

**வைக்கோல், சோளத்தட்டை, மக்காச்சோளத்தட்டை - யூரியா செறிவூட்டம்**

மார்ச் 30,2010,15:54 IST

தேவையான பொருட்கள்: வைக்கோல்-100 கிலோ, யூரியா-6 கிலோ, தண்ணீர்-60 லிட்டர், பாலிதீன் படுதா (அ) நல்ல சாக்கு, மூடும் அளவிற்கு.

செயல்முறை: நல்ல சுத்தமான தரைமீது சிறிது வைக்கோலை பரப்பி அதன் மேல் 10 கிலோ வைக்கோலை பரப்பவும். 6 கிலோ யூரியாவை சுமார் 60 லிட்டர் தண்ணீரில் (மூன்று பெரிய குடம்) கரைத்துக் கொள்ளவும். இத்தண்ணீரை எடுத்து 10 கிலோ வைக்கோலின் மேல் லேசாக நனைக்கும் அளவிற்கு தெளிக்கவும். பின் அதனை மிதித்து காற்றினை வெளியேற்றவும். இதுபோல் படிப்படியாக வைக்கோலை பத்து கிலோவாக பரப்பி, ஆக மொத்தம் 100 கிலோ வைக்கோலையும் நன்கு பரப்பி அனைத்து யூரியா தண்ணீரையும் தெளிக்கவும். இறுதியாக நன்கு மிதித்து எல்லா

காற்றையும் வெளியேற்றவும். இவ்வாறாக தயார் செய்யப்பட்ட வைக்கோலினை பாலிதீன் (அ) சாக்கு மூலம் மூன்று நாட்களுக்கு மூடி வைக்கவும். மூன்று நாட்களுக்குப் பிறகு படுதாவை திறந்துவிடலாம். இவ்வைக்கோலை சுமார் 14 நாட்களுக்கு (இரண்டு வாரம்) அப்படியே விட்டுவிட வேண்டும். பிறகு மேல் அடுக்கில் இருந்து சிறிது சிறிதாக எடுத்து உபயோகப்படுத்தவும். இவ்வாறாக சோளத்தட்டை, மக்காச் சோளத்தட்டை மற்றும் கரும்புச் சக்கைகளுக்கு கூட இம்முறையை பயன்படுத்தலாம்.

சோளத்தட்டை/ கரும்புச்சக்கை

மக்காச்சோளத் தட்டை (100 கிலோவிற்கு)

(100 கிலோவிற்கு)

1. யூரியா 4 கிலோ 4 கிலோ

2. தண்ணீர் அளவு 50 லிட்டர் 30 லிட்டர்

3. பதப்படுத்தும் நாட்கள் 14 நாட்கள் 21 நாட்கள்

கறவை மாடுகளுக்கு கொடுக்கும் அளவும் அதன் பயன்களும்

மாடு எருமை

1. முதலில் 1 கிலோ அளவில் 2 கிலோ அளவில்

(ஒரு வாரத்திற்கு)

2. பழகியபின் அது விரும்பும் எருமை விரும்பும்

அளவிற்கு அளவிற்கு

3. அடர்தீவனம் 1 கிலோ அளவுக்கு அடர்தீவனம் ஒரு கிலோ

குறைக்கலாம். அளவுக்கு குறைக்கலாம்.

4. 1 முதல் 2 லிட்டர் வரை ஒரு லிட்டர் வரை

அதிக பால் அதிக பால்

குறிப்பு: யூரியா முழுவதும் அம்மோனியாவாக மாறிவிடுவதால் மாடுகளுக்கு எவ்வித கெடுதலும் இல்லை. புரதச்சத்தை மூன்று மடங்கும், செரிமான தன்மையை இருபது விழுக்காடு வரையும் அதிகப் படுத்துகிறது. செறிவூட்டப்பட்ட வைக்கோலை தருவதன் மூலம் ஒரு நாளைக்கு ஒரு மாடு (அல்லது) எருமை மூலம் 5 முதல் 6 ரூபாய் வரை அதிக லாபம் கிடைக்கும். யூரியா செறிவூட்டிய வைக்கோலை கன்றுகளுக்கு கொடுக்கலாகாது. முதலில் அம்மோனியா வாசனை காரணமாக வைக்கோலை உட்கொள்ள மாடுகள் தயங்கலாம். ஆயினும் ஒரு சில நாட்களில் விரும்பி உண்ண ஆரம்பிக்கும். போர் அடிக்கும்பொழுதே யூரியா கரைசலை தெளித்துவிட்டால் ஆட்கூலி செலவு குறையும்.

**அ.செந்தில்குமார் மற்றும் த.அ.விஜயலிங்கம்**

**உழவர் பயிற்சி மையம், தேனி-625 531, 04546-260 047.**

**வெட்டிவேர் புல்லில் இருந்து தயாரிக்கப்படும் பொருட்கள்**

மார்ச் 30,2010,15:50 IST



வெட்டிவேர் புல் வளரும் காலத்தில் வேர் மூலமும், இலை மூலமும் அனேக நன்மைகள் செய்கிறது. வெட்டிவேர்புல் அறுவடைக்கு பின் வேர், இலை இரண்டும் பலவிதமான பொருள்களாக செய்யப்பட்டு பயன்படுகிறது. வெட்டிவேர் நறுமணம் தருவதுடன் புத்துணர்ச்சியும் தருகிறது. வெட்டிவேரைக் கொண்டு கைவிசிறிகள் செய்யப் படுகிறது. இந்த விசிறியானது வெயில் காலங்களில் குளுமையான, நறுமணமிக்க காற்றை நமக்கு தருவதுடன் வெயில் களைப்பை நீக்கி புத்துணர்வு தருகிறது. வெட்டிவேரைக்கொண்டு ஏர்கூலர் மேட் செய்யப்படுகிறது. இந்த மேட்டை ஏர்கூலர்களில் பொருத்துவதால் மிகவும் விரும்பி அனுபவிக்கக் கூடிய நறுமணமிக்க குளுமையான சூழ்நிலையை உருவாக்கித் தருகிறது.

வெட்டிவேரைக்கொண்டு அந்துருண்டை போன்ற பூச்சிவிரட்டிகள் செய்யலாம். இதனால் சமையலறை, துணிகள் வைக்கும் அலமாரிகள் போன்ற இடங்களில் உள்ள அந்து பூச்சிகள், கரப்பான் பூச்சிகள், கரையான்கள், எறும்பு வகைகள் போன்றவை வெட்டிவேரின் வாசனைக்கு அருகில் வராமல் ஓடிவிடும். வெட்டிவேர் வாசனை பத்திகள், மாலைகள் போன்ற பூஜைப் பொருட்கள் செய்ய பயன் படுகிறது. இதன் பயன்பாடுகள் பூஜையறையில், கோயில்களில் நல்ல பக்தி உணர்வை ஏற்படுத்தும். வெட்டிவேர் குளியல் பிரஷ்கள் செய்ய பயன்படுகிறது. இவை உடலுக்கு குளுமையையும் நறுமணத்தையும் தருகிறது. வெட்டிவேர் கம்ப்யூட் டர் இருக்கைகள், கார் இருக்கைகள் செய்ய பயன்படுகிறது. இவை அதிகநேரம் தொடர்ச்சியாக கம்ப்யூட்டர் வேலையிலும் கார் ஓட்டுவதிலும் ஈடுபடுபவர்களுக்கு உடல் சூட்டை குறைத்து நலம் தருகிறது. யோகா மேட் வெட்டிவேர் கொண்டு தயாரிக்கப் படுகிறது. இது யோகா போன்ற பயிற்சிகளில் ஈடுபடுபவர்களுக்கு மிகவும் ஏற்றதாக இருக்கிறது. வெட்டிவேர் பாய்கள் செய்யவும் பயன் படுகிறது. இந்த பாயை பயன் படுத்துவதன் மூலம் சரும நோய்கள் தீருகின்றது. உடல் சூட்டை குறைத்து வெப்பத்தால் ஏற்படும் நோய்களை கட்டுப்படுத்து வதுடன் நல்ல நறுமணத்தால் நல்ல உறக்கம் வரவும் உதவு கிறது. வெட்டிவேர் மெத்தை, தலையணை போன்றவைகளும் செய்ய பயன்படுகிறது.

வெட்டிவேர் நறுமண எண்ணெய், சென்ட் தயாரிப்பில் முக்கிய இடம் வகிக்கிறது. வெட்டிவேர் எண்ணெய் கரையும் திறன் மிகவும் அதிகம் என்பதால் அனைத்து வகையான சென்ட் தயாரிப்பிலும் பயன்படுகிறது. வெட்டிவேர் எண்ணெய்

மஜாஜ், ரத்த செல்களை வலிமையுறச் செய்து என்றும் இளமையுடன் திகழ வழிசெய்கிறது. வெட்டிவேர் கிரிக்கெட் குல்லா செய்யவும் பயன்படுகிறது. இதை அணிவதால் வெயிலின் தாக்கம் குறைந்து குளுமை தருகிறது. வெட்டிவேரைக்கொண்டு அழகு பொம்மைகள், கடவுள் பொம்மைகள் போன்றவை செய்யப்படுகிறது. வெட்டிவேர் காலணிகள் செய்ய பயன்படுகிறது. இதை அணிவதன் மூலம் பித்தவெடிப்புகள் குறைய வாய்ப்புள்ளது. தொற்றுநோய்கள் பரவாமல் தடுக்கப்படுகிறது.

வெட்டிவேர் புல்லின் இலைகள் அறுவடைக்குப் பின் தகுந்த முறையில் பாடம் செய்யப் படுகிறது. இதைக்கொண்டு அழகான கூடைகள், பைகள், தொப்பிகள் போன்றவை செய்யப் படுகிறது. வெட்டிவேர் புல் உலர்ந்த நிலையில் நல்ல எரிபொருளாக மாறுகிறது. அனல்மின் தயாரிப்பில் நிலக்கரிக்கு பதிலாக வெட்டிவேர் புல் பயன்படுத்தும் வாய்ப்பு அதிகம் உள்ளது. தொடர்புக்கு: சி.பாண்டியன், சிவகங்கை. 93629 49176.

**-கே.சத்யபிரபா,**

**67, சர்வலட்சுமி இல்லம், செல்லம் குடியிருப்பு, உடுமலை-642 126.**

**நவீன தொழில்நுட்பம்**

மார்ச் 30,2010,15:49 IST



**அதிக மகசூல் தரும் கினியாபுல் கோ(ஜிஜி)3 :** தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக் கழக தீவனப் பயிர் துறையிலிருந்து கினியாப்புல் கோ(ஜிஜி)3 என்ற புதிய ரகம் 2009ம் ஆண்டு வெளியிடப்பட்டது.

**இதன் சிறப்பியல்புகள்:** அதிக பசுந்தீவன மகசூல் (425 டன்/எக்டர்/ வருடம்), அதிக தூர்கள் (40-60 தூர்கள்/குத்து) மற்றும் சாயாத தன்மை; வெளிர்பச்சை நிறத்துடன் கூடிய மிக அகலமான இலைகள் (3.2 - 4.5 செ.மீ.) அதிக இலைகள் (280-350/குத்து); அதிக இலை / தண்டு விகிதம் (0.73); நிழலில் வளரக்கூடியது; விரைவாக முளைக்கும் திறன் கொண்டது, சுவையானது. அதனால் கறவை மாடுகள், செம்மறி ஆடுகள், வெள்ளாடுகள், பன்றிகள் மற்றும் ஈமு கோழிகள் விரும்பி உண்கின்றன. புரதச்சத்து 6.35 சதம், பூச்சி மற்றும் நோய் தாக்குதல் அற்றது; வருடத்திற்கு 8

மறுதாம்பு பயிர்களை அறுவடை செய்யலாம். முதல் அறுவடை 70-75 நாட்களிலும், அடுத்தடுத்த அறுவடைகள் 40-45 நாட்கள் இடைவெளியிலும் செய்யலாம்.

இந்த ரகம் தற்போது சாகுபடியில் உள்ள கோ.2 என்ற ரகத்தைக் காட்டிலும் 75 சதம் அதிக பசுந்தீவன மகசூல் கொடுக்க வல்லது. அதிக வீரியத்துடனும் நிறைந்த தூர்களுடனும் செழிப்பாக வளரக் கூடியது. இதிலிருந்து பெறப்படும் பசுந்தீவனம் நச்சுத்தன்மையற்றது. அதிக சுவையுடன் இருப்பதால் கறவைமாடுகள், ஆடுகள், பன்றிகள் மற்றும் ஈமு பறவைகள் மிகவும் விரும்பி உண்கின்றன. இதன் முக்கிய பண்பு நிழலைத் தாங்கி வளரக் கூடியது. எனவே தென்னந்தோப்புகளில் மரங்களுக்கு இடையிலும் வீணாக உள்ள இடங்களிலும் சாகுபடி செய்து பயன்பெறலாம்.

**சாகுபடி நுட்பங்கள்:** இறவைப் பயிராக ஆண்டு முழுவதும் பயிரிடலாம். பருவ காலங்களிலும் மானாவாரி நிலம், நிழலைத் தாங்கி வளரும் பயிராதலால் தென்னந் தோப்புகளுக்கு ஏற்ற பயிர். நன்கு பண்படுத்தப்பட்ட நிலத்தில் 50 செ.மீ. இடைவெளியில் பார்கள் அமைத்து அடியுரமாக எக்டருக்கு தொழு உரம் 25 டன், தழைச்சத்து 50 கிலோ, மணிச்சத்து 50 கிலோ, சாம்பல் சத்து 40 கிலோ கொடுக்கக்கூடிய உரங்களை கணக்கிட்டு இடவேண்டும். மேலுரமாக தழைச்சத்து 50 கிலோ. ஒவ்வொரு அறுவடைக்குப் பிறகும் 30 கிலோ தழைச்சத்து கொடுக்கக்கூடிய உரங்களை இடவேண்டும்.

எக்டருக்கு தேவையான 40,000 வேர்க்கரணைகளை 50x50 செ.மீ. இடைவெளியில் நடவேண்டும். நட்டவுடன் மற்றும் உயிர்நீர் 3வது நாளும் பாய்ச்ச வேண்டும். 7 முதல் 10 நாட்களுக்கு ஒருமுறை மண் மற்றும் மழை அளவைப் பொறுத்து நீர் பாய்ச்ச வேண்டும். பொதுவாக பயிர் பாதுகாப்பு மருந்துகள் தெளிக்க வேண்டிய தேவை இருக்காது.

**அறுவடை:** முதல் அறுவடை 70-75 நாட்களிலும், மறு அறுவடைகள் 40-45 நாட்கள் இடைவெளியிலும் செய்ய வேண்டும்.

**மகசூல்:** ஒரு ஆண்டிற்கு 8 அறுவடைகளில் எக்டருக்கு 425 டன்கள். தற்பொழுது இப்புதிய ரகத்தின் வேர்க்கரணைகள் விற்பனைக்கு உள்ளது. வேர்க்கரணைகளைப் பெறவும் மற்றும் இதர விளக்கங் களுக்கும் பேராசிரியர் மற்றும் தலைவர், தீவனப்பயிர் துறை, த.வே. பல்கலைக் கழகம், கோயம்புத்தூர் -641 003. 0422-661 1228. (தகவல்: ச.பாபு, கு.வேலாயுதம், கோ.விஜயகுமார், தீவனப்பயிர் துறை, த.வே.பல்கலைக் கழகம், கோயம்புத்தூர்-641 003).